பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

11 02 2025 Tuesday 6.30 Pm

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- விவசாயம், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- சரக்கு மற்றும் சேவைகளுக்கான வரி விகிதங்கள் ஜிஎஸ்டி குழும கூட்டத்தில் நிர்ணயிக்கப்படுவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

- மாணவர்களால் சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

- தமிழகத்தில் மின்சார பற்றாக்குறையை சமாளிக்க மின் உற்பத்தித் திட்டங்களை மாநில அரசு விரைவுப்படுத்த வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.
- தேசிய விளையாட்டு போட்டியில் டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் தமிழகம் தங்கப்பதக்கம் வென்றுள்ளது.

---- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<>>>>>

மொழி வேறுபாடுகளை கடந்து மக்களை ஒருங்கிணைக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பாரிசில் நடைபெற்றுவரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர், அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளின் மறுசீரமைப்பிற்கு இந்த தொழில்நுட்பம் பெரிதும் உதவுவதாக தெரிவித்துள்ளார்.

நாட்டில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் முன்னெப்போதும் இல்லாத வகையில் வளர்ச்சியடைந்து வருவதாக அவர் கூறினார்.

பிரான்ஸுடன் இணைந்து இந்த மாநாட்டை நடத்துவது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

விவசாயம், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் இந்த தொழில்நுட்பம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதில் செயற்கை நுண்ணறிவு முக்கிய பங்காற்றி வருவதாகவும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

அரசியலமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஜிஎஸ்டி கவுன்சில், சரக்கு மற்றும் சேவை வரிக்கான பொருட்களின் வகைப்பாடுகள் மற்றும் வரி விகிதத்தை அமல்படுத்தி வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், இதுதொடர்பான எந்தவொரு மாற்றமும் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் மட்டுமே முடிவு செய்யப்படுவதாக தெரிவித்தார்.

சரக்கு மற்றும் சேவைகளுக்கான வரி விகிதங்களில் மாற்றங்கள் செய்வது குறித்து ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்க மாநில நிதியமைச்சர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெரும்பாலான பொருட்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<>>>>>

பாதுகாப்பு, காப்பீடு, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, தொலைத்தொடர்பு, விண்வெளி ஆகிய துறைகளில் அந்நிய நேரடி முதலீடுகளுக்கான கொள்கைகளில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு 'Jatin Prasatha ' தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், வெளிப்படையான மற்றும் எளிமையான நடைமுறைகள் காரணமாக நாட்டின் அந்நிய நேரடி முதலீடு அதிகரித்து வருவதாக கூறினார்.

இதுவரை, 90 சதவீதம் அந்நிய நேரடி முதலீடுகள் பெறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புத்துறையில் 74 சதவீதம் அளவிற்கு அந்நிய நேரடி முதலீடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு Jatin Prasatha தெரிவித்தார்.

<<<<<>>>>>

மாணவர்களால் மட்டுமே சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் அரசுப்பள்ளி நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர், வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஏணிப்படிகளாக இருந்த பள்ளியையும், ஆசிரியர்களையும் ஒருபோதும் மறக்கக்கூடாது என்று கூறினார்.

அரசுப்பள்ளிகளில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித்தரப்படும் என்று திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி, தமிழக அரசின் திட்டங்களால் உயர்கல்வி படிக்கும் மாணவர்கள் சாதனைகளை படைத்து வருவதாக தெரிவித்தார்.

தமிழ்வழியில் படிக்கும் மாணவர்களுக்கு மாநில அரசு பணி ஒதுக்கீடு செய்துவருவதாக திரு பொன்முடி கூறினார்.

<<<<<>>>>>

தமிழக அரசின் இலவச வேட்டி – சேலை வழங்கும் திட்டத்தில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை என்று மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு ஆர் காந்தி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்திட்டத்திற்கு தேவையான வேட்டி – சேலைகள் தமிழகத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் இருந்து பெறப்படுவதாக தெரிவித்துள்ளார்.

தறியிலிருந்து பெறப்படும் வேட்டி – சேலைகள் உரிய தரப்பரிசோதனைக்கு பிறகே கொள்முதல் செய்யப்படுவதாக அந்த அறிக்கையில் திரு காந்தி குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் மின்சார பற்றாக்குறையை சமாளிக்க மின் உற்பத்தித் திட்டங்களை மாநில அரசு விரைவுப்படுத்த வேண்டும் என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கோடை காலத்தில் மின்தேவை அதிகரிக்கக்கூடும் என்பதால், அதற்கேற்ப மின்சார விநியோகத்தை சீராக வழங்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மின்சாரத்தை தனியாரிடமிருந்து அதிக விலை கொடுத்து வாங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்தார்.

மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழகத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் மாநில அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் திரு அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

தைப்பூசம் இன்று உலகெங்கிலும் உள்ள அனைத்து முருகன் கோவில்களிலும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி, முருகன் கோவில்களில் சிறப்பு அபிஷேகங்கள், பூஜைகள் நடைபெற்றன. இதில், ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

இதையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்நாள் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியும், ஆசியையும் வழங்கட்டும் என்று கூறியுள்ளார்.

முருகப்பெருமானின் அருள் நம் அனைவருக்கும் அறிவு, வளம், வலிமை, ஆகியவற்றுடன் வழிகாட்டட்டும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

மத்திய பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் வேளாண் கடன் அட்டையின் உச்ச வரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய வேலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயி திரு ரமேஷ், இத்திட்டத்தின்மூலம், தனது விவசாயத்தை விரிவுபடுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - ரமேஷ் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டத்தை சேர்ந்த ஏழாம் வகுப்பு மாணவி பள்ளியில் மயங்கி விழுந்து உயிரிழந்ததையடுத்து அவரது குடும்பத்தினருக்கு ஐந்து லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

--------------

மதுரை அலங்காநல்லூர் கீழக்கரையில் இரண்டு நாட்கள் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டியை மாநில வணிகவரித்துறை அமைச்சர் திரு மூர்த்தி இன்று தொடங்கிவைத்தார்.

----------------

ராமேஸ்வரத்தையடுத்து மெய்யமபுளி பகுதியில் ஏழு கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் கட்டுமானப்பணியை மாநில சட்டத்துறை அமைச்சர் திரு ரகுபதி தொடங்கிவைத்தார்.

-------------

கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராமன் புதூர் பகுதியில் அமைந்துள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

----------------

இந்தியாவில் மின்சார ரயில் சேவை தொடங்கப்பட்டதன் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில் சேலம் ரயில்வே கோட்டம் சார்பில் சிறப்பு பேரணி நடைபெற்றது.

----------

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் சொகுசு காரில் கடத்திவரப்பட்ட ஒரு டன் போதைப்பொருளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

தேசிய விளையாட்டு போட்டியில் தமிழகம் இன்று ஒரு தங்கப்பதக்கம் வென்றுள்ளது.

டேராடூனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் தமிழகத்தின் பத்ரிநாத் - லஷ்மி இணை, கர்நாடகாவின் நிக்கி – சோஹா சாதிக் இணையை நேர் செட்டுகளில் வென்று இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-----------

ஆசிய கலப்புக்குழு பேட்மிண்டன் போட்டிகள் சீனாவில் இன்று தொடங்கியது.

Qingdao நகரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், 12 அணிகள் பங்கேற்கின்றன.

இதில், இந்தியாவின் லக்ஷயா சென், ஹெச் எஸ் பிரணாய், மாலவிகா பன்சோத், சாத்விக் சாய்ராஜ், சிராக் ஷெட்டி, திரிஷா ஜாலி, காயத்ரி கோபிசந்த், அஷ்வினி பொன்னப்பா, தனிஷா கிறாஸ்டோ ஆகியோர் பங்கேற்கின்றனர்.

**<<<<<END>>>>>**